# 5

# திருவிருந்துக்குமுன் தற்பரிசோதனை

Self-examination before the Lord's Supper

*முகவுரை*

- திருச்சபையில் ஆவிக்குரிய அர்த்தத்தை இழக்கும் நியமனங்கள் நாளாவட்டத்தில் விக்கிரகங்களாகிவிடுகின்றன —
  எ.கா.) வெண்கல சர்ப்பம் (2 இரா 18:4)
- **கடைசி விருந்தைச்** (Last Supper) சுவிசேஷங்களின் ஆக்கியோன்கள் சரித்திரமாய் எழுதியுள்ளனர் —

  அப்போஸ்தலன் பவுல் அதைக் **கர்த்தருடைய பந்தி** (Lord's Supper) என்றழைத்து ஆவிக்குரிய அர்த்தம் கொடுத்துள்ளார்.

  இதன் முழுப் பொருளையும் விளங்கிக்கொள்ள
  ஒன்றை ஒன்றின்மேல் வைத்துப் பார்க்கவேண்டும்.
- கர்த்தரது பந்தியில் பங்குபெறுவதற்குப் பிரதானமான ஆயத்தம்: **தற்பரிசோதனை** —
  1 கொரி 11:28

***எதைப் பரிசோதிக்கவேண்டும்? —***

***1. உங்கள் சகவுறவுகளைப் பரிசோதியுங்கள்.***

1 கொரி 11:17-21

- பிறரை அவமதித்தல் (வச 22,23)
  கிறிஸ்துவின் உடலாம் சபையில்
  ஒவ்வொருவரும் அருமையான உறுப்பினர்.
  *''கையைப் பார்த்துக் கண் சொல்லமுடியாது''*
  (1 கொரி 12:20,21)
- ஒருவருக்கொருவர் போட்டா போட்டி
  லூக் 22:20-26
- பதிலுக்குப் பதில் செய்தல்
  யோ 18:10,11
  ஒருவரோடொருவர் ஒப்புரவாகுங்கள்.
  ஒரே அப்பம், எனவே ஒரே சரீரம்.



***2. கர்த்தரோடுள்ள உங்கள் உறவைப் பரிசோதியுங்கள்.***

1 கொரி 11:23 ... *''அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவிலே''*

- உங்கள் ஜெப வாழ்வு எப்படியிருக்கிறது?
  கெத்செமனேயில் இயேசுவுக்குச் சீடர் ஏமாற்றமளித்தனர்.
- திருமறைத் தியானத்தில் கிரமமாயிருக்கிறீர்களா?
  திருமறையே திருவார்த்தை.
  வச 23 ... *''நான் கர்த்தரிடம் பெற்றது ...''*
- உங்கள் வழிகளிலெல்லாம் கர்த்தரை நினைக்கிறீர்களா?
  வச 24,25 ... *''என்னை நினைவுகூரும்படி ...''*
  உணர்வுள்ள உறவுடன் தேவனோடு நடைபோடுதல்.

***3. உலகத்தோடுள்ள உங்கள் உறவைப் பரிசோதியுங்கள்.***

1 கொரி 11:32

- உலகின் அசுத்தங்களிலிருந்து விலகி வாழ்கிறீர்களா?
  1 கொரி 10:21,22
  அந்தகாரத்தின் செயல்பாடுகள்
- உலகிற்குமுன் வெட்கமின்றிக் கர்த்தரை அறிக்கையிடுகிறீர்களா?
  — பேதுருவின் தோல்வி (மத் 26:69-75)
  — இவ்வுலகிற்குமுன் நாம் வெட்கப்பட்டால் ... (மாற் 8:38)

*முடிவுரை*

இவ்விதத் தற்பரிசோதனை விளையாட்டல்ல —
1 கொரி 11:28-31 ... *வியாதி ... மரணம் ...*

■

*கர்த்தரின் பந்தியில் வா — சகோதரா*
*கர்த்தரின் பந்தியில் வா!*

*தேவ அன்பைப் பாரு — கிறிஸ்துவின் சீஷர் குறை தீரு;*
*பாவக் கேட்டைக் கூறு — ராப்போசன பந்திதனில் சேரு;*
*சாவுக்குரிய மா பாவமுள்ள லோகம்*
*தன்னில் மனம் வைத்து அன்னியன் ஆகாதே!*

(கீர்த்தனை 306)